**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 02-12-2022**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-12-02 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-12-03 | 2022-12-04 | 2022-12-05 | 2022-12-06 | 2022-12-07 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 6.0 | 2.0 | 0.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 30.0 | 29.0 | 30.0 | 29.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 21.0 | 21.0 | 22.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 70 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 8.0 | 6.0 | 4.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 70 | 70 | 20 | 360 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 8 | 8 | 4 | 4 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

டிசம்பர் 3,4,5,7 தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.அதிகபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 21-22 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 90% ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60-70 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 4-8 கி.மீ வரை வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 07.12.2022 முதல் 13.12.2022 வரை இயல்பை விட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வயலை அவ்வப்பொழுது கண்காணித்து தாக்கம் தென்பட்டால் அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மற்றும் பூஞ்சாணகொல்லியுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | பனி அதிகமாக இருப்பதால் நெல்லில் குலைநோய் தென்படுகிறது. குலைநோயை கட்டுப்படுத்த அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC பூசணக்கொல்லியை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற வீதத்தில் தெளிக்க வேண்டும். இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த அசாக்ஸிஸ்ட்ரோபின் + ட்ரைசைகலசோல் @500 மி.லி / எக் என்ற அளவில் தெளிக்க வேண்டும். பாக்டீரியல் இலை கருகல் நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்லின் @300 கிராம் + காப்பர் ஆக்ஸி குளோரைடு 1.25 கிலோ / எக் என்ற அளவில் தெளிக்க வேண்டும். நெல் வயலில் அசோலா இடுவதன் மூலம் 25% ரசாயன உரம் பயன்படுத்துவதை குறைத்து மண்ணின் வளத்தை மேம்படுத்துவதுடன் மகசூலையும் பெருக்கலாம். நெற்பயிரில் இலை மடக்கு புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த பைபிரினில் 1 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| துவரை | துவரையில் பூக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்ஸ் வொண்டர் @ 5 கிலோ / எக்டர் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மலர் தொடங்கப்படுவதற்கு முன் தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | தக்காளியில் மகசூல் அதிகரிக்க டிரைக்கான்டனால் 1.25 பி பி எம் (625 மி.லி மருந்து 500 லிட்டர் நீரில் கலந்து ) நடவு செய்த 15 நாட்களுக்கு பின்பும், பூக்கும் பருவத்திலும் தெளிக்க வேண்டும் . |
| கத்திரிக்காய் | கத்தரியில் தண்டு மற்றும் காய்ப்புழு தாக்கத்தின் பயிர் மேலாண்மை முறை: பாதிக்கப்பட்ட அல்லது சேதப்பட்ட இலைக்குருத்து அல்லது நுனித்தண்டு மற்றும் பாதிக்கப்பட்ட காய்கள் போன்றவற்றை சேகரித்து அழிக்க வேண்டும். ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கத்தரி பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். |
| மிளகாய் | மிளகாய் சாகுபடியில் பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதை தடுக்கவும், காய்பிடிப்பை அதிகப்படுத்தவும் ட்ரையகாண்டனால் வளர்ச்சி ஊக்கியை 1.25 மி .லி/ லி என்ற அளவில் நட்ட 20,40,60 மற்றும் 80 வது நாட்களில் தெளிக்கவேண்டும். காய் பிடிப்பை அதிகரிக்க NAA 10 பி பி எம் (10 மி. கி / 1 லிட்டர் நீரில் கலந்து ) நடவு செய்த 60 மற்றும் 90 நாட்களுக்கு பின்பு தெளிக்க வேண்டும். ஒரு எக்டருக்கு 25 டன் தொழுவுரம் மற்றும் தழைச்சத்து,மணிச்சத்து மற்றும் |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | சாம்பல்சத்து 30,60,30 கிலோ கிராம் என்ற விகிதத்தில் அடியுரமாக இட வேண்டும்.நடவு செய்த 30,60 மற்றும் 90 நாட்களில் 30 கிலோ தழைச்சத்தை மூன்றாக பிரித்து மேலுரமாக இட வேண்டும். |
| வாழை | வாழை நடவு செய்த 3,5,7 மாதத்திற்கு பிறகு 1% நுண்ணூட்ட கலவையை இலைவழியாக தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் வாழையின் தரம் மற்றும் மகசூல் கூடும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | முலையழற்சியை தடுக்க பால் கறந்த பிறகு மாடுகளை இரண்டு மணி நேரம் நிற்க வைக்க வேண்டும்.அதிக அடர் தீவனம் மற்றும் உலர்தீவனம் கொடுக்க வேண்டும். உள் மற்றும் வெளிப்புற ஒட்டுண்ணிகளுக்கு ஹைடெக் போலஸ் என்ற மாத்திரையை ஒரு பசுவிற்கு ஒன்று வீதம் கொடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு ரத்த கசிவு செப்டிசீமியா என்ற தடுப்பூசியை கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி போடவேண்டும். |
| வெள்ளாடு | கால்களில் அதிகமாக வளர்ந்துள்ள குளம்பை வெட்டி ஒழுங்குபடுத்த வேண்டும். ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும். வயிற்றுப்போக்கு இருந்தால் போலஸ் சல்பாடிமிடின் என்ற மாத்திரையை நடுத்தர ஆடுகளுக்கு 5 கிராம் என்ற அளவிலும் ,சிறிய ஆடுகளுக்கு 2.5 கிராம் என்ற அளவிலும் கொடுக்க வேண்டும். பி பி ஆர் நோய்க்கு எதிராக ஆடுகளுக்கு தடுப்பூசி போடவேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | விரைவில் ஈரத்தை உறிஞ்சக்கூடிய விரைவாக உலர்த்தும் கூளத்தை பயன்படுத்த வேண்டும். கூளத்தில் 25 முதல் 30 சதவிகிதம் வரை குப்பையின் ஈரப்பதம் ஈரம் உள்ளவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.ஈரமான குப்பைகளை அகற்றிவிட்டு, உலர்ந்த குப்பைப் பொருட்களை நிரப்ப வேண்டும். பத்து சதுர மீட்டருக்கு 1 கிலோ சுண்ணாம்புத்தூளை பரப்பி கிளறி விட்டு, தரையையும் சுத்தப்படுத்த வேண்டும்.கோழி கொட்டகையை சுற்றிலும் படுதாவைக்கொண்டு மறைவு கட்ட வேண்டும். குரோமிக் ரெஸ்பிரேட்டரி நோய், காக்சிடியோசிஸ் மற்றும் கோலி பேசில்லோசிஸ் ஆகிய நோய்கள் வருவதற்கு வாய்ப்புள்ளதால், கவனமாக இருக்க வேண்டும். |